# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

(தேசியத் தரமதிப்பீட்டுக்குழுவின் B+ தகுதி பெற்றது)

TAMIL UNIVERSITY, THANJAVUR

(ACCREDITED BY NAAC WITH B+ GRADE)

2026

## தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர்ப் பட்டப் படிப்புக்கான நுழைவுத் தேர்வு விவரக் கையேடு

## Prospectus for Tamil University Research Programme Common Entrance Test (TURCET- 2026)

**இணையதளம்** : www.tamiluniversity.ac.in

**தொடர்பிற்கு:**

1. **தொலைபேசி** : 04362- 226720, 227151 (அலுவலக நேரம் மட்டும்)
2. **மின்னஞ்சல்** : coetamiluniv@gmail.com

# பொருளடக்கம்


பக்கம்

**பகுதி 1- அறிமுகம்**

1. தமிழ்ப் பல்கலைக்கழகம் 03
2. சிறப்புகள் மற்றும் வசதிகள் 03
3. முனைவர்ப் பட்டச் சேர்க்கை படிநிலைகள் 04
4. முனைவர்ப் பட்டம் வழங்கும் துறைகள், ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு மையங்கள், ஒழிவிடங்கள் 05

**பகுதி 2 – முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வு 2026**

5. முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வு விதி முறைகள் 06
6. முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்தல் 08
7. விண்ணப்பக் கட்டணம் 08
8. தேர்வு நடைபெறும் இடங்கள் 09

பின்னிணைப்பு 1 முனைவர்ப் பட்டப் பாடங்களும் தகுதிகளும் 10

# பகுதி 1 – அறிமுகம்

## 1. தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு, கலை, அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்தம்பர் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றது. தேசிய தரமதிப்பீட்டு குழுவின் B+ தரப்புள்ளி பெற்ற இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களில் இருபத்தாறு துறைகளுடன் இயங்கி வருகின்றது.

## 2. சிறப்புகள் மற்றும் வசதிகள்

- தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு நூலகம்
- சிறந்த கல்வியாளர்களால் பயிற்றுவிக்கப்படுதல்
- மாணவர்கள் பயன்படுத்த இணையதள வசதி (WiFi)
- வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம்
- ஆய்வுக்கூட வசதி
- இருபாலருக்கான தனித்தனி விடுதிகள்
- பட்டியல்/பழங்குடி இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட/பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை
- பல்கலைக்கழக மானியக் குழுவால் வழங்கப்படும் தேசியத் தகுதித்தேர்வு / மாநிலத் தகுதித் தேர்விற்கான இலவசப் பயிற்சி (NET/SET/CSIR/ICHR)
- போட்டித் தேர்வுக்கான பயிற்சிகள்
- மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம், தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம்

## 3. முனைவர்ப் பட்டச் சேர்க்கை படிநிலைகள்

TURCET 2026
நுழைவுத் தேர்வு அறிவிப்பு

↓

TURCET 2026 நுழைவுத்தேர்வு

**(விதிவிலக்கு: NET/SET/SLET/JRF/GATE தகுதி பெற்றவர்களுக்கும், அயலக மாணவர்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி முனைவர்ப் பட்ட பொது நுழைவுத் தேர்விலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.)**

↓

தேர்வு முடிவுகள் வெளியீடு

↓

சேர்க்கை அறிவிப்பு

↓

சேர்க்கைக்கு விண்ணப்பித்தல்

↓

நேர்காணல்

↓

மாணவர் சேர்க்கை

## 4. முனைவர்ப் பட்டம் வழங்கும் துறைகள், ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு மையங்கள், ஒழிவிடங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துறைகளிலும், ஏற்பளிக்கப்பெற்ற ஆய்வு மையங்களிலும் முழுநேர/பகுதிநேர முனைவர்ப் பட்டப் படிப்பிற்கு **2026**இல் கீழ்க்கண்டவாறு ஒழிவிடங்கள் உள்ளன. நுழைவுத் தேர்வு முடிந்து சேர்க்கை நடைபெறும் நேரத்தில் ஒழிவிடங்களில் மாற்றம் ஏற்படலாம்.

| வ. எண் | துறை | சேர்க்கைக்கான இடங்கள் (ஒழிவிடங்கள்) • | அயலக மாணவர்கள் சேர்க்கைக்கான (ஒழிவிடங்கள்) • |
|---|---|---|---|
| 1. | சிற்பத்துறை | 3 | 2 |
| 2. | இசைத்துறை | 1 | 0 |
| 3. | ஓலைச்சுவடித்துறை | 5 | 2 |
| 4. | அரிய கையெழுத்துச் சுவடித்துறை | 0 | 2 |
| 5. | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை | 2 | 2 |
| 6. | அயல்நாட்டுத்தமிழ்க்கல்வித்துறை | 1 | 3 |
| 7. | மொழிபெயர்ப்புத்துறை | 6 | 6 |
| 8. | அகராதியியல் துறை | 3 | 2 |
| 9. | சமூக அறிவியல் துறை | 2 | 4 |
| 10. | அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை | 3 | 3 |
| 11. | கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை | 0 | 8 |
| 12. | இலக்கியத்துறை | 5 | 4 |
| 13. | மொழியியல் துறை | 0 | 4 |
| 14. | மெய்யியல் துறை | 7 | 6 |
| 15. | பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | 0 | 2 |
| 16. | நாட்டுப்புறவியல் துறை | 0 | 4 |
| 17. | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி | 5 | 2 |
| 18. | சித்த மருத்துவத்துறை | 1 | 6 |
| 19. | கணிப்பொறி அறிவியல் துறை | 0 | 2 |
| 20. | தொழில் மற்றும் நில அறிவியல் துறை | 4 | 2 |
| 21. | தொல்லறிவியல் துறை | 0 | 2 |
| 22. | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | 0 | 4 |
| 23. | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை | 1 | 2 |
| | **கூடுதல்** | 49 | 74 |

**தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட பிற ஆய்வு மையம்.**

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் தொடர்பு முகவரி** | **தொலைபேசி எண்கள்** | **ஒழிவிடங்கள்•** |
|---|---|---|---|
| 1. | உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,சென்னை – 600 113. | 044-22542992, 22542781 தொலைநகலி 22541436 | 9 |

•ஒழிவிடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படலாம்

# பகுதி -2 முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வு

## 5. முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்வு விதி முறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முனைவர்ப்பட்ட நெறிமுறைகளை முழுமையாக அறிய தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.tamiluniversity.ac.in) உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர்ப் பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் 2022ஐப் (Ph.D. Regulations 2022) பார்க்கவும். நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் முன்னர் உங்களது முதுகலைப்பாடம் தொடர்பான பாடத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர்ப் பட்டம் அளிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**பயிற்று மொழி**

- ❖ அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் பயிற்றுமொழி தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகும்.
- ❖ ஆங்கிலத்தில் ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்டால் தமிழில் 10 பக்க அளவில் ஆய்வேட்டின் சுருக்கம் அளிக்கப்படவேண்டும்.

**கல்வித்தகுதி**

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3+2 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.
- முதுநிலையில்55% (விழுக்காடு) மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் (grade) பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல் / பழங்குடி இனத்தவர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / மாற்றுத் திறனாளிகள் ஆகிய பிரிவினர் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிமுறைகளின்படி முதுநிலைப் பட்டப்படிப்பில் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும் (சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச்சான்றிதழ் இணைத்தல் வேண்டும்).
- சித்த மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+5+3 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

முனைவர்ப் பட்ட நுழைவுத்தேர்வு வினாத்தாள் அமைப்பு:

1. தொடர்புடைய பாடம் - 70 மதிப்பெண்
2. ஆய்வு நெறிமுறைகள் - 20 மதிப்பெண்
3. ஆய்வுத் திறன்(Numerical ablity) - 10 மதிப்பெண்

---------------

கூடுதல் - 100

-----------------

(100 வினாக்களும் கொள்குறி வினாக்கள் (MCQ) முறையில் வினாத்தாள் அமையும்).

**தேர்வுக்காலம் : 2 மணிநேரம் (120 நிமிடங்கள்)**

**பிற விதிமுறைகள்**

- முனைவர்ப் பட்டம் பதிவு செய்வதற்கான வயது வரம்பு 60 ஆகும்.
- தகுதி உள்ள விண்ணப்பதாரர்கள் முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.
- நுழைவுத் தேர்வு நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கைபேசி / மின்னஞ்சல் வழியாக மட்டுமே தெரிவிக்கப்படும். எனவே, சரியான கைபேசி / மின்னஞ்சல் முகவரியை அளிக்கவும். நுழைவுத் தேர்வு எழுதாதவர்களின் விண்ணப்பங்கள் சேர்க்கைக்குப் பரிசீலிக்கப்படமாட்டாது.
- முனைவர்ப் பட்டச் சேர்க்கைக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கடந்த 2024 -இல் நடைபெற்ற TURCET நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் டிசம்பர் மாதம் 2026 வரை முனைவர்ப் பட்ட சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்.
- துறை, பாடப்பிரிவு மாற்றம் தேவைப்படின் TURCET 2026 தேர்வினை எழுதலாம்.
- முனைவர்ப் பட்ட சேர்க்கைக்கான அனுமதி நெறியாளரின் ஒழிவிடத்திற்கு உட்பட்டது.
- நுழைவுத் தேர்வில் தகுதி பெறுவதற்கான குறைந்த அளவு மதிப்பெண்கள்.

| | | |
|---|---|---|
| பொதுப் பிரிவு(OC) | : | 50 விழுக்காடு |
| பிற்பட்ட வகுப்பு (BC) , மாற்றுத்திறனாளிகள் | : | 45 விழுக்காடு |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் (MBC/DNC) | : | 40 விழுக்காடு |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர் (SC/ST) | : | 35 விழுக்காடு |

முனைவர்ப் பட்ட நுழைவுத்தேர்வில் தகுதி பெற்றவர்களுக்கு தமிழ்ப் பல்கலைக்கழக இணைய வழியாக தகவல் தெரிவிக்கப்பெறும். நுழைவுத்தேர்வு எழுதியவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்திற்குச் சென்று (www.tamiluniversity.ac.in) தங்களது மதிப்பெண் பட்டியலைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**விதிவிலக்கு**

தேசியத் தகுதித் தேர்வு (NET)/ மாநில அளவிலான தகுதித் தேர்வு (SLET)/ அறிவியல், தொழிற்கூட ஆய்வுகளுக்கான குழு-பல்கலைக்கழக நல்கைக் குழுவின் இளநிலைத் தகைமை CSIR-UGC JRF/GATE பொறியியலுக்கான பட்டதாரித் திறன் தேர்வு ஆகியவற்றில் தகுதி பெற்ற மாணவர்களுக்கும், அயலக மாணவர்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி முனைவர்ப் பட்ட பொது நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பெறுகிறது.

## 6. முனைவர்ப் பட்ட நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பித்தல்

- தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முன்னர் தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.tamiluniversity.ac.in) உள்ள 2022ஆம் ஆண்டு முனைவர்ப் பட்ட விதிமுறைகளை (Ph.D Regulations) நன்கு படிக்கவும்.
- தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்தில் சென்று **முனைவர்ப் பட்டத் தேர்வு 2026 (TURCET 2026)** உள்ள விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து அஞ்சல் வழியாக விண்ணப்பிக்கலாம்.

## 7. விண்ணப்பக் கட்டணம்

<table>
<tr><td>பொதுப் பிரிவினர்</td><td>ரூ.2000</td></tr>
<tr><td>ஆதிதிராவிடர் /பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)</td><td rowspan="2">ரூ. 1000</td></tr>
<tr><td>மாற்றுத்திறனாளி (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)</td></tr>
</table>

- **வரைவோலை செலுத்துபவர்கள் “The Registrar, Tamil University, Thanjavur என்ற முகவரிக்கு வரைவோலை எடுக்க வேண்டும்.**

## நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க இறுதி நாள்: 06.03.2026

**2026ல் நான்காம் பருவத்தில் முதுகலைத் தேர்வு எழுத உள்ள மாணவர்களும் TURCET 2026 நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பிக்கலாம்.**

# 7. விண்ணப்பிக்கும் முறை

முனைவர்பட்ட நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தில் கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் நகலைச் சொந்தக் கையொப்பம்(Self Attested) இட்டு இணைத்து **இயக்குநர், கல்விநிலை ஆய்வு இயக்ககம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613010** என்ற முகவரிக்கு 06.03.2026 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

விண்ணப்பக் கட்டணங்கள் தவறுதலாக வேறு கணக்கில் செலுத்தப்பட்டாலோ, இரண்டு முறை செலுத்தினாலோ தொகை மீள வழங்கப்பட மாட்டாது.

# 8.தேர்வு நடைபெறும் மையம்

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம், தஞ்சாவூர் மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

(முனைவர் பட்ட நுழைவுத் தேர்விற்கான விண்ணப்பத்தினை இறுதி செய்வது தொடர்பாக தமிழ்ப் பல்கலைக்கழகம் எடுக்கும் முடிவே இறுதியானது).

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## முனைவர் பட்டப் பாடங்களும் தகுதிகளும்

| துறையின் பெயர்<br>1 | முனைவர் பட்டப் படிப்பு<br>2 | நுழைவுத்தேர்வுக்கான பாடம்<br>3 | முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பதாரரின் முதுகலை/முதுஅறிவியல் பாடத் தகுதிகள்<br>4 |
|---|---|---|---|
| சிற்பத்துறை | 1.வரலாறு - HISTORY<br>2.வரலாறு -நுண்கலை History - Fine Arts<br>3. கலைவரலாறு - Art History<br>4.Fine Arts - நுண்கலை<br>5.HISTORY-Sculpture வரலாறு - சிற்பம் | வரலாறு<br>History | முதுகலை வரலாறு – M.A. History<br>முதுகலை நுண்கலை<br>M.A. Fine Arts (Sculpture and Paintings) மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இசைத்துறை | 1.இசை - Music<br>2.பரதநாட்டியம் - Bharathanatiyam | 1.இசை - Music<br>2.பரதநாட்டியம் - Bharathanatiyam | முதுகலை இசை<br>M.A -M.F.A.(Music), M.P.A(Music)<br>முதுகலை பரதநாட்டியம்<br>M.A., M.F.A. Bharathanatiyam, M.P.A. (Bharathanatiyam) மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| ஓலைச் சுவடித்துறை | 1.தமிழ் - Tamil<br>2.தமிழ் - சுவடியியல் Tamil -Manuscriptology | தமிழ் - | முதுகலைத் தமிழ் – M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 1.வரலாறு - History<br>2.வரலாறு - சுவடியியல் History - Manuscriptology | History | முதுகலை வரலாறு –<br>M.A. History மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அரிய கையெழுத்துச் சுவடித்துறை | 1.தமிழ் - Tamil | Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை | 1.வரலாறு - History<br>2.வரலாறு - கல்வெட்டியல் History-Epigraphy | History | முதுகலை வரலாறு – M.A History<br>முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் - M.A. History & Archaeology<br>முதுகலைப் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் –<br>M.A. Ancient History & Archaeology மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| மொழிபெயர்ப்புத் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2.மொழிபெயர்ப்பியல் – Translation | மொழிபெயர்ப்பியல் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 3.ஆங்கிலம் - English | ஆங்கிலம் | முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 4. மொழியியல் - Linguistics | மொழியியல் | முதுகலை மொழியியல்<br>M.A. Linguistics<br>முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் –<br>M.A. English மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அகராதியியல் துறை | 1.தமிழ் - Tamil<br>2.அகராதியியல் – Lexicography<br>3. மொழியியல் - Linguistics | தமிழ், மொழியியல் | முதுகலைத் தமிழ், முதுகலை மொழியியல் - M.A.Tamil,<br>M.A. Linguistics மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| சமூகஅறிவியல் துறை | 1.சமூகப்பணி - Social Work | Social Work | முதுநிலைச் சமூகப்பணி - M.A.Social Work தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| அறிவியல்தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் - M.A. Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை | 1.கல்வியியல் - Education | கல்வியியல் | கல்வியியல் நிறைஞர் –<br>M.Ed. Education மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இலக்கியத் துறை | 1.தமிழ் - Tamil | தமிழ் | முதுகலைத் தமிழ் மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| மொழியியல் துறை | 1.மொழியியல் - Linguistics | மொழியியல் | முதுகலை மொழியியல் - M.A. Linguistics<br>முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2. ஆங்கிலம் – English | ஆங்கிலம் | முதுகலை ஆங்கிலம்- M.A. English |
| மெய்யியல் துறை | 1.மெய்யியல் - Philosophy<br>2.கோயில் நிருவாகம் - Temple Management<br>3.பண்பாடு – Culture<br>4. சமயம் - Religion | Philosophy | முதுகலை மெய்யியல், இந்தியப் பண்பாடு, சமயம் சார்ந்த படிப்புகள்<br>PG in Philosophy, Indian Culture, Religious Studies மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | 1.மொழியியல் - Linguistics<br>2.மானுடவியல் – Anthropology | 1.மொழியியல் - Linguistics<br>2.மானுடவியல் – Anthropology | முதுகலை மொழியியல், முதுகலை மானுடவியல்<br>M.A Linguistics,<br>M.A Anthropology மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| நாட்டுப்புறவியல் துறை | 1.தமிழ் - Tamil | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| | 2.நாட்டுப்புறவியல் – Folklore | 2.நாட்டுப்புறவியல் – Folklore | முதுகலை நாட்டுப்புறவியல் - MA Folklore மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி | 1.தமிழ் - Tamil | தமிழ் – Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 1.ஒப்பிலக்கியம் - Comparative Literature | ஒப்பிலக்கியம் - Comparative Literature | முதுகலைத் தமிழ், ஏதாவது ஒரு இந்திய மொழியில் முதுகலைப் பட்டம்<br>MA Tamil, PG in any Indian Language மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் |
| சித்தமருத்துவத் துறை | 1.சித்தமருத்துவம் - Siddha Medicine<br>2.உயிர்த் தொழில்நுட்பவியல் Biotechnology<br>3.உயிர்வேதியியல் - Biochemistry<br>4.நுண்ணுயிரியல் - Microbiology<br>5.தாவரவியல் - Botany<br>6.வேதியியல் - Chemistry<br>7.மருத்துவத்தாவரவியல் Medicinal Botany<br>8.மருந்துஅறிவியல் Pharmaceutical Sciences | Siddha | எம்.டி , சித்தமருத்துவம், மருந்து அறிவியல் மற்றும் தொடர்புடைய இணையாகக் கருதப்படும் பாடங்கள் M.D. Siddha, Masters of Pharmacheutical Sciences, and related and equivalent subjects |
| தொழில் மற்றும் நிலஅறிவியல் துறை | 1.நிலத்தியல் - Geology<br>2.பயன்பாட்டு நிலத்தியல் - Applied Geology<br>3. நிலஅறிவியல் - Earth Science<br>4.தொலையுணர்வியல் - Remote Sensing<br>5.புவியியல் - Geography<br>6.புவிசார்தகவலியல் – Geoinformatics | Earth Sciences Group | முது அறிவியல் – நிலத்தியல், மற்றும் தொடர்புடைய மற்றும் இணையாகக் கருதப்படும் பாடங்கள் PG in Geology, Earth Sciences, and related and equivalent subjects |
| தொல்லறிவியல் துறை | 1. கணிதம் - Mathematics | கணிதம் - Mathematics | முது அறிவியல் கணிதம் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள் - PG in Mathematics |
| கணிப்பொறி அறிவியல்துறை | 1.கணிப்பொறிஅறிவியல் Computer Science | கணிப்பொறிஅறிவியல் Computer Science | M.Sc., Computer Science / Information Technology / M.C.A<br>முதுநிலைக் கணிப்பொறி அறிவியல், தகவல் தொழில்நுட்பவியல், முதுநிலைக் கணினிப் பயன்பாட்டியல் |
| சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | 1.சுற்றுச்சூழல்அறிவியல் Environmental Science<br>2.சுற்றுச்சூழல்- உயிர்த் தொழில்நுட்பவியல் Environmental Biotechnology<br>3.சுற்றுச்சூழல் நுண்ணுயிரியல் Environmental Microbiology<br>4.நுண்ணுயிரியல் - Microbiology<br>5.உயிர்த் தொழில்நுட்பவியல் - Bio-technology<br>6. சுற்றுச்சூழல் மேலாண்மை Environmental Management | Environmental Science | முதுநிலைச் சுற்றுச்சூழல் அறிவியல், உயிர் அறிவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br>PG in Environmental Sciences, related and equivalent subjects |

| | | | |
|---|---|---|---|
| நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை | 1.நூலகம் மற்றும் தகவல் அறிவியல்<br>Library and information Science | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் | முதுநிலை நூலகம் மற்றும் தகவல் அறிவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br><br>PG in Library and information Science and related and equivalent subjects |
| உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை | 1.தமிழ் – Tamil | தமிழ் – Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil |
| | 2. மொழியியல் - Linguistics | 2. மொழியியல் - Linguistics | முதுகலைத் தமிழ், முதுகலை மொழியியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br>MA Tamil, M.A. Linguistics and related and equivalent subjects |
| | 3. நாட்டுப்புறவியல் – Folklore | 3. நாட்டுப்புறவியல் – Folklore | முதுகலை நாட்டுப்புறவியல் மற்றும் தொடர்புடைய, இணையாகக் கருதப்படும் பாடங்கள்<br>M.A. Folklore and related and equivalent subjects |